உ

சிவம்.

குமரன்றுணை.

தெளிவுமதித் திறவுகோல்.

இஃது

திருநெல்வேலிப் பேட்டை

சைவசமய சன்மார்க்க சங்கத்தின் அமைச்சராயும்

கொழும்பில் இலங்கை சைவபரிபாலன

சபையில் ஆசிரியராயுமிருந்தவரும்

தமிழ்வளர்ச்சி இறையுணர்ச்சிகளை

சபைகளில் பேச வல்லவருமாகிய சைவத்திருவாளர்

வித்துவான்

த. ஆறுமுகநயினார் பிள்ளை

அவர்களால் இயற்றியதை

மதுரை தாசில்தார் பள்ளிவாசல்தெரு

K. மாயாண்டி பிள்ளையால்

தமது

மதுரை வடக்குமாசிவீதி

மனோன்மணி விலாஸ் அச்சியந்திர சாலையிற்

...பதிப்பிக்கப்பெற்றது.

1920. [அணா 1.

...ERED COPY RIGHT.

OFFICE OF ... 31 OCT 1920
113/1920/IV
Q2:417
N20
172694

உ

சிவம்.

குமரன்றுணை.

தெளிவுமதித் திறவுகோல்.

4D
170.W
OFFICE OF ... 8 OCT 1920 MADRAS.

காப்பு - வெண்பா.

வழுத்துந் தெளிவு மதித்திறவு கோலைப்
பழுத்தவுளத்தொடியான் பாட - முழுத்தொந்திப்
பிள்ளை வளர் துதிக்கைப் பிள்ளை உபாபதிபேண்
கள்ளமிலா மூத்தபிள்ளை காப்பு.

நூல்.

நாடறியுந் தெளிவுமதித் திறவு கோலை
நயந்தளித்தோம் கைக்கொள்வோர் நாளும் வாழ்வார்
மூடமதித் திறவுகோல் எனும்நூல் பார்த்து
முழுமோசம் போவாரைத் தடுத்தாண் டின்பம்
நீடவருள் வேதசிவா கமங்கள் சொன்ன
நெறிப்படுத்தி உலகசுக நிலையும் அப்பால்
வீடுமிது தானுதவும் உண்மை யுண்மை
மெய்கண்டார் அருளாலே வெளியிட் டோமே.

ஆநந்தக்களிப்பு.

உண்மை உணர்ந்த வல் லோரே சிவம்
ஒன்று பரம்பொருள் என்றுகொள் வீரே. உண்

1 கண்மணி போன்றவ ரேனும் புவி
காத்தருள் மன்னவர் ஆயினும் வேதப்
பண்மலி அந்தண ரேனும் சிவப்
பற்றில ரேலவர்ப் பற்றவொண் ணாது. உண்

2 தன்னை அறிந்திடல் ஒன்றும் சிவன்
தான்தலை வன்எனக் காணல் இரண்டாம்
மன்னும் உயிர்க்குயிர் ஆகத் தலை
வற்றெரிந் தால்விசிட் டாத்துவி தந்தான். உண்

3 இத்தகு முச்சம யங்கள் இரண்
டின்மை உண்மை அன்மை என்னுமெய் பேசிச்
சுத்தசை வாத்து விதத்தைத் தரும்
சோபான மாயடை வாக விளங்கும். உண்

4 நாலேயுஞ் சைவசித் தாந்தக் குரு
நாதரெல் லாங்கிர மப்படி யென்பார்
மேலொடு கீழ்முர ணாக மத
வீம்பர்கள் பேசி வெறும்பவர் ஆவார். உண்

5 சுத்தசை வாத்து விதந்தான் அனல்
தோய்ந்த இரும்பு தொலேந்தனல் ஆதல்
ஒத்துயிர்ப் போத முனேப்புத் தொலேந்
தோங்கு சிவப்பிழம் பாயுற லாகும். உண்

6 ஆக்கம் உறுங்குரு மார்க்க வலார்
ஆகியுங் கோயில் அயர்க்குநர் மூடர்
தீக்கை பெறுதவர் மூடர் சிவ
சின்னங் களேமறந் தோர்களு மூடர். உண்

7 தீர்த்த முடன்தலம் மூர்த்தி இவை
சிந்தைகொள் வார்அறி வுள்ளவர் நாளும்
பார்த்திரு கண்குளிர் வார்கள் அருட்
பாக்கிய வான்கள் அவர்க்குநன் றுமே. உண்

8 குருவிலிங் கஞ்சங்க மங்கள் இடங்
கூர்தரு பத்திசெய் வோர்மறை மூலப்
பொருளறி வார்முளே பற்றிச் செலப்
பூச்சக் கரக்கிழங் கைத்தெரி வார்போல். உண்

9 தருமம் இரண்டெனப் பட்டுச் சிவன்
தாள்மலர் நாளும் வணங்குதல் ஒன்றும்
உருவுயிர்க் கென்றும்நன் றுற்றல் அடுத்
துள்ளதாம் மீதிறை கட்டளே யாமால். உண்

10 இயன்றநல் லோர்களேத் தேர்ந்து அமிழ்து
இட்டுணும் அன்பரும் மெய்த்தவர் ஆகி
முயன்ற தவம்பழு தின்றேல் பெற
முன்வருஞ் சங்கம ருஞ்சிவம் ஆவார். உண்

11 உத்தம பாத்திரர் சாந்தம் பொறை
உண்மை இரக்கம் அடக்கம் அஞ்சாமை
பத்திவை ராக்கியம் சர்வ சனப்
பற்றிவை ஒன்பதும் பற்றின ராவார். உண்

12 சற்சனர் தம்மை மதிக்கும் திறன்
சற்றுமில் லாதுபொய் வேடந் தரித்த
துற்சன சோம்பரைக் கஞ்சாக் குடித்
தூர்த்தரை மெய்த்தவ ரென்பரிக் காலம். உண்

13 பூணூல் தரித்தவன் சாமி தினம்
பொய்பல பேசிப் புலம்புவன் சாமி
சாணுத ரத்தை வளர்க்கத் திரி
சாப்பாட்டு ராமனும் சாமியிக் காலம். உண்

14 சட்டி யெடுத்தவன் சாமி சடை
தன்னை வளர்த்தன னேலவன் சாமி
மொட்டை யடித்தவன் சாமி முழு
மூடனுஞ் சாமியென் பான்கலி காலம். உண்

15 காசு பிரிப்பவன் சாமி அனக்
காவடி தோளிலிட் டாலவன் சாமி
வீசு மடுப்பினிற் சாம்பல் அணி
வீணனுஞ் சாமியென் பான்கலி காலம் உண்

16 கட்குடித் தாடுவன் சாமி துணி
காவியிற் றோய்த்துடுத் தாலவன் சாமி
வெட்கமி லம்மணன் சாமி நகல்
வேடனுஞ் சாமியென் பான்கலி காலம். உண்

17 ஒருவனுக் கொருபிடி சோறு கொடுத்
துண்ணு இரும்புநெஞ் சத்தவன் சாமி
தருமமாத் தாகநீர் தந்தால் குடத்
தண்ணீர்தீட் டாமென வெண்ணுவோன் சாமி. உண்

18 கொண்டவ ளால்வெறுத் திட்ட பவக்
கூட்டினன் சாமி உழைத்துண லின்றிக்
கண்டவர் வீடு தொறும்போய்ப் பலைக்
காட்டுவன் சாமியென் பான்கலி காலம். உண்

19 தன்மடத் தீர்வறி யாமல் புதி
தாமடங் கட்டுவல் என்பவன் சாமி
கன்மம் மறந்தவன் சாமி சுணங்
கனிலிவன் பின்வரு சீடனுஞ் சாமி. உண்

20 தீமிள காய்ப்பழச் சாமி பகல்
தின்றும் இராத்திரி யிற்பழஞ் சோறுண்
டேமருந் துங்கடுக் காயும் விளக்
கெண்ணெயும் உண்டு பிழைப் பனிக் காலம். உண்

21 எத்துசில் சாமிகட் பார்த்தே உம
தில்லவள் எங்கெனிற் செத்தனள் வேறோர்
மத்தனைச் சேர்ந்தனள் என்னை அவள்
வைதனள் நோயினள் மட்டியென் கின்றார். உண்

22 வாதனை செய்கலி காலம் முனின்
மாறுதல் கண்டுமிவ் வாண்டிகளைத்தான்
பாதக ராகவி டாமல் தொழில்
பார்த்துணச் சாலைகள் வைத்திடல் தர்மம். உண்

23 ஊழியச் சோறுண ஊட்டுப் புரை
உணடதில் உண்பவர் அச்சியர் பாற்போய்
நாழிகை போக்குவர் சீட்டுத் துறை
நண்ணுவர் அன்னவர் செய்பிழையர்க்காம் உண்

24 பழமறை ஈகையைச் சற்பாத் திரர்
பாற்றரச் சொல்லுதல் பார்த்தில ரானார்
முழுமகன் மார்க்கருள் கின்றார் அவர்
முயல்பவம் முற்றும் இவர்பெறு கின்றார். உண்

25 பழஞ்செருப் பாலடிப் போர்க்கே விருப்
பத்தொடு கோடிசெம் பொன்பணிந் தீவார்
களஞ்சுத வாத வுலோபர் எனக்
கற்றதும் பொய்யிலைக் கற்றவர் தேர்வார். உண்

26 கற்றுணர் வோங்கிய மிக்கோர் கொடை
கல்வி பயின்றிடுஞ் செல்வருக் கீவார்
மற்றது வித்தையொ டன்ன தரு
மங்க ளெனப்படும் மங்களமாமால், உண்

27 இல்லறம் முப்பதாண் டெல்லை வளர்த்
தேறுநல் லோர்பிறை போன்றுளப் பற்றை
மெல்ல விடுப்பவர் நீத்தோர் அவர்
மெய்த்தவ ராவர் விளங்கவர்க் கேமின். உண்

28 உதரம் வளக்கும் முயற்சி ஒழித்
தோங்குசை வப்பிர சங்கம் உஞற்றி
இதரர் உரைக்குள் விழாமல் தடுத்
தின்பருள் நாவலர் இன்புறச் செய்மின். உண்

29 மாணவர் மெய்த்துற வோர்கள் திறன்
மன்னிய நாவலர்த் தேர்ந்திவர்க் கின்பாய்
வேணது நல்கினர் வாழ்வார் அற
வேந்தர் இவர்புவி வேந்தராய் மீள்வார். உண்

30 நொண்டிகள் நோயினர் குருடர் மனம்
நோதல் இலாதறஞ் செய்தவர் உய்வார்
பண்டைய நாளறச் சாலை சல
பாரிலுண் டின்றிலை யெண்ணினிச் செய்வார். உண்

31 ஏளைகட் கிட்டுணு வோர்தாம் பினர்
இங்குகோ டீச்சுர ராகிப் பிறப்பார்
வேளை நிகர்த்துமின் னார்கள் மனம்
விழைதரும் அழகிய ராகிச் சிறப்பார். உண்

32 உலகுயிர்க் கிதஞ்செய லீதாம் இனி
யுடையவன் வழிபடுணர்த்திடு வாமால்
குலவும் அழகிய சொக்கர் உறை
கோயிலைத் தொண்டரைக் குரவரைத் தொழுமின். உண்

33 உளம்மொழி மெய்களுக் கெட்டாச் சிவம்
ஒன்றுள தப்பொருள் காணவொண் ணாதிவ்
வளவிற் கடவுளிருந்தால் எவர்
அறிவர் அறியவொண் ணான்கிலன் ஆவான். உண்

34 மெய்ப்பொருளாகிய கடவுள் திரு
விளையாடல் செய்துதன் மெய்யறி விப்பான்
வைப்புறு பிட்டையும் உண்டு முனர்
மண்ணுஞ் சுமந்தடி பட்டதுந் தேர்மின் உண்

35 எத்தனை யோவிளை யாடல் அவன்
இங்குசெய் தானருள் கூர்ந்துநாம் உய்வான்
அத்தனை யாடலுங் கோயில் தொழு
மன்பரெல் லாரும் அறிந்தனர் வாழ்வார். உண்

36 ஆலய விக்கிர கந்தான் விழி
யாதும் மறைசெவி யாலுமெம் மான்றன்
கோலம் உணர்த்திடும் தேர்ந்தோர் அதிற் 172694
கூடி யிரும்பனற் கூடலின் வாழ்வார். உண்

37 விக்கிர கத்தை வெறுத்தார் எவர்
வேறொரு சாதனத் தாலிறை கண்டார்
மொக்கியுந் தூங்கியும் பெண்கள் உடன்
முயங்கியுஞ் சாகுவர் முத்தியை நாடார் உண்

38 காதிலார் வேதமே வேண்டார் இரு
கண்ணிலார் நாந்தொழுங் கோயிலை வேண்டார்
காதொடு கண்ணுமில் லாதோர் மறை
கற்கிலர் கோயிலைக் கைகுவிக் கில்லார். உண்

39 நான்மறை தேர்கிலார் செவிடர் அருள்
நம்பனார் கோயிலைக் கும்பிடார் குருடர்
கோண்மறை கோயில் இரண்டும் உளங்
கொண்டவர் ஈசனைக் கண்டவ ராவார். உண்

40 வாழிடத் துற்றுல கெல்லாந் தெரி
மாணவர் பூகோள சாத்திரங் கற்றும்
வீழுல கப்படம் பார்த்தும் அதில்
வித்தகராகுவர் உத்தமர் தேர்வார். உண்

41 வரிவடி வோர்ந்ததன் பின்னர் ஒலி
வடிவிற் பொருள்கள் அறிந்துளங் கொண்ட
பெரியரும் எட்டையொவ் வோர்கால் திருப்
பிப்படிப் பாரதைத் தள்ளிட மாட்டார். உண்

42 வன்றொண்டர் அப்பர்சம் பந்தர் மணி
வாசகர் அவ்வை வியாக்கிர பாதர்
வென்ற பதஞ்சலி மூலர் முதல்
மெய்யரியாரெம தையனைப் போற்றார். உண்

43 மார்க்கண்டர் பூசைசெய் துய்ந்தார் சிவ
வாக்கியர் கோயில் வணங்கின நாளுஞ்
சீர்க்குரு வோடிலிங் கஞ்சங் கம
சேவையை மெச்சினர் பட்டினத் தாரும், உண்

44 நட்டகல் லைத்தெய்வ மென்ற கவி
நற்சிவ வாக்கியம் நூற்றினும் உண்டோ
பட்டரின் வென்றிநா னூற்றில் ஒரு
பாடல் அதேசிவன் கோயிலை மெச்சும். உண்

45 மோனவல் லார்களும் ஞானம் மிக
முற்றிய மெய்யரும் கற்றுணர் தாயு
மானவ ராதிய யாகம் பெரு
மான்றிருக் கோயில் வணங்கினார் உய்ந்தார். உண்

46 ஆலய நிந்தைசெய் வார்மா தவர்
ஆயினும் பாதகர் ஆவர்அத் தீயோர்
ஏலல கைத்துவம் பெற்றுக் கரை
யேற்றமின் றுயலை வார்கள்பே யாயே. உண்

47 அலகைகள் ஆகிய பேர்க்கோ உல
கழியுமட் டும்பிறப் பில்லையப் பாலும்
விலகருந் தீக்குழி வீழ்வார் அவர்
மெய்யெடுக் காமையான் மேம்படு கில்லார். உண்

48 வேந்தன் பகைவரைத் தீவாந் தரம்
விடுதலிற் கல்லறை வீடய லார்க்காம்
மாந்தருள் மேலவர் தம்மைச் சிறை
வைத்து விடல்நிகர் வாழ்வருள் வான்கோன். உண்

49 எண்ணருஞ் சென்மம் எடுத்தார் வினை
யேபுரிந் தெய்த்தெமன் தண்டனை யாலே
பண்ணிய பாவம் விடுத்தார் சிவ
பத்தியி னற்பர முத்தி யடுத்தார். உண்

50 தன்மனை யோடறம் பேணும் பிறர்
தாரம் உடன்பிறப் பாகவே காணும்
நன்மகார்ப் பெற்றிசை பூணும் சிவன்
நற்றுணை யாயருள் நல்குதல் தோணும் உண்

51 மூர்த்தி தலந்தீர்த்தம் பேணும் அருள்
முக்கணர் உம்முடன் வாழ்வது தோணும்
நாத்திகர் சொற்கொள நாணும் தினம்
நற்றெளி வார்மதித் திறவுகோல் காணும். உண்மை

குருட்டறிவாம் மூடமதி திறக்கத் தானே
குவலயத்தி லொருதிறவு கோலுண் டாச்சு
தெருட்டறிவாம் தெளிவுமதி திறக்கத் தக்க
தெளிவுமதித் திறவுகோல் ஈதொன் றுச்சு
மருட்டியெழு மூடமதி திறந்தால் ஓகோ
மாண்டிடுவார் தெளிவுமதி திறந்தால் வாழ்வார்
அருட்டிறத்தா ருண்மைகண்டித் திறவு கோலை
அன்பொடுபே ணினருய்வார் அருளாள் வாரே.

பட்டர் வெற்றி.

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுட்டிவந்து முணுமுணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ."

இதன் பொருள்:— சுட்டசட்டி=பதார்த்தங்களை வேகச்செய்தற்குக் கருவியாயிருந்த சட்டியும், சட்டுவம்=கிண்டிப் பக்குவப்படுத்தற் கருவியாயிருந்த அகப்பையும், கறி=கறியினது, சுவை=உருசியை, அறியுமோ?=அறியமாட்டாது. சுவையை ஆக்கி நாவாலறிந்து உண்டு களிப்பானகிய ஒருவனைப்போலகோவிலிற் கும்பிடப்பட்ட இறைவன் அருட்டிருமேனியைக் கண்ணாலறிந்து உட்கொண்டு மகிழ்வானகிய மெய்யன்பனின்] நாதனுள்ளிருக்கையில்=உள்ளில் இறைவனிருக்கையால், நட்டகல்லை=பிரதிட்டிக்கப்பட்ட சிலாவிக்கிரகத்தை,தெய்வமென்று=தெய்வமெனக்கருதி, நாலுபுட்பஞ்சாத்தி = தொங்குகின்ற பூமாலையணிந்து, சுட்டிவந்து=குறிக்கொண்டுவந்து, முணுமுணென்றுசொல்லுமந்திரம்=உள்ளீடாய்ச்செபிக்கும் மறை, ஏதடா=உபகரணமென்கிற துணைக்காரணமடே. [ஆதலால் உன்னிடத்தில்] நட்டகல்லும் பேசுமோ?=பிரதிட்டாமூர்த்தம் பேசமாட்டாது என்பதாம். இது-ஒரு குருட்டுமார்க்கத்தான் கேட்டகேள்விக்கு, அவன் அறிவுக்கேற்றபடி பட்டர் கூறிய விடையாம். இதனல்-சட்டியும் சட்டுவமும் இவ்வழிக்கறியாவதில்லை, கறியாகாதவழி சுவையும், சுவையறிவானுமில்லை கோயில் இல்வழி கடவுளின் அறிவுண்டாவதில்லை. கடவுள் ஞானமில்வழி அருள் விளக்கமும், இன்பந்திளைப்பவனுமில்லை. ஆகவே சுவை நுகர்ச்சிக்குச் சட்டியுஞ்சட்டுவமும் வேண்டப்படுமாறே, அறிவின்பந்திளைத்தற்கு ஆலயவழிபாடு வேண்டப்படுமென்றவாறும். சட்டியிற்காய்கறி பதார்த்தங்கள் கிடத்தலேபோல் விக்கிரகத்தில் இறைவனுடைய நாமரூபக்கிரியைகள் கிடத்தலறிக. இன்னும் விரிப்பிற்பெருகும். இவ்வருமைப்பாடலின் பொருளறியாதாருடைய மருட்டின் வழிப்படுவார் குருட்டறிஞரே யாவார். "பட்டர் வெற்றி" என்னும் நூலினுள்ள 400 பாடல்களும் சிவவாக்கியர் பாடலென்று அத்துடன் சேர்க்கப்பட்டோர் புத்தகமாய் வந்ததென் றறிக.

தெளிவுமதித் திறவுகோல்

முற்றிற்று.

172694

குமரன்றுணை.

விளம்பரம்.

புதிய கீர்த்தனைப் புத்தகம்! புதிய கீர்த்தனைப் புத்தகம்!!

இதுவரையில் வெளிவராததும் மிக்கமேலானதும்
வெகுகாலமாக வெளிவர எதிர்பார்த்திருந்ததுமான

பரமானந்தப்

பக்திரஸக் கீர்த்தனை.

இது
உலகெங்கும் புகழ் ஓங்கப் பெற்றவரும்
வித்வான்களால் நன்கு மதிக்கப்பெற்றவருமான
தூத்துக்குடி

T T சங்கரதாஸ்சுவாமி அவர்களால்

இயற்றியது.

அதிசீக்கிரம் வெளிவரும்! அதிசீக்கிரம் வெளிவரும்!!

எதிர்பாருங்கள்.

ஸ்ரீமத் T T சங்கரதாஸ சுவாமி அவர்களால் இயற்றப் பெற்றுள்ள பாடல்கள் அனந்தம் இவரதுபாடல்களை நாடகக்கம்பெனி எல்லா ஆக்டர்களும் மற்றுமுள்ளவர்களும் பாடிவருவ. இன்றும் என்றும் வழக்கமாயிருக்கிறது. இப்போது இவராலியற்றிய கீர்த்தனைகளில் சிலவற்றை அச்சிட்டு வருகிறது. அநேக கீர்த்தனைப் புத்தகங்களை நீங்கள் கண்ணுற்றிருந்தாலும், இக்கீர்த்தனைப் புத்தக அருமை பெருமையை வாங்கி வாசித்துணர்ந்தபின் மற்றோர் கீர்த்தனைக்கும் இக்கீர்த்தனைக்குமுள்ள வித்தியாசம் நன்கு புலப்படும். சந்தச் சிதைவும், தாளச்சோர்வும், எதுகை மோனை இல்லாததும், சொற்சுவை பொருட்சுவை முதலிய சாரமற்ற புத்தகம் மலிவான இவ்வமயம் இக்கீர்த்தனைப் புத்தகம் வெளிவருவது தமிழபிமானிகளின் தவப்பலனே. புத்தகம் வாங்க முந்துங்கள். வெளிவரும் தினத்தை எதிர்பாருங்கள்

இங்ஙனம் கு. மாயாண்டி பிள்ளை
மனோன்மணி விலாசம் பிரஸ்,
வடக்குமாசி வீதி மதுரை.

மனோன்மணி விலாசம் பிரஸ், வடக்குமாசிவீதி, மதுரை.